# உங்களின் சொந்த COVID-19 முதலுதவி தொகுதியை தயாரிப்பது எப்படி

சமூக தகவல் வழங்குவோர்:

சிறு காயங்கள் அல்லது விபத்துகள் எங்கும், எப்போது வேண்டுமானாலும் ஏற்படலாம். எனவே உங்கள் வீட்டில் அல்லது வேலைத்தளத்தில் போதியளவு முதலுதவி மருந்துப் பொருட்கள் அடங்கிய தொகுதியை தயார் நிலையில் வைத்திருப்பது முக்கியமானதாகும்.

அதுபோன்று, தினசரி பதிவாகும் COVID-19 தொற்றாளர்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துக் காணப்படும் நிலையில், உங்கள் வீட்டில் அல்லது அலுவலகத்தில் காணப்படும் முதலுதவித் தொகுதியிலுள்ள மருந்துப் பொருட்களை மெருகேற்றம் செய்து வைத்திருப்பது உகந்தது என்பதுடன், அடிப்படை சுகாதார பராமரிப்புக்கு அவசியமான மருந்துப் பொருட்கள் அதில் அடங்கியிருக்கும்.



## சாதாரண முதலுதவி தொகுதிக்கு மேலதிகமாக COVID-19 முதலுதவித் தொகுதியில் கொண்டிருக்க வேண்டிய மேலதிக அத்தியாவசிய பொருட்கள் கீழே தரப்பட்டுள்ளன:

- விற்றமின் C – நோய் எதிர்ப்பு தொகுதியை வலிமைப்படுத்தும்
- விற்றமின் E – நோய் எதிர்ப்பு தொகுதியை வலிமைப்படுத்தும்
- இன்ஃப்ராரெட் வெப்பமானி/மேர்கரி வெப்பமானி
- நாடித்துடிப்பு ஒக்ஸிமீற்றர்/ஒட்சிசன் கண்காணிப்பான்
- சீனி/குளுக்கோசு கலவை
- பயன்படுத்திவிட்டு அகற்றக்கூடிய முகக் கவசம்
- ஹான்ட் சனிடைசர்
- பயன்படுத்திவிட்டு அகற்றக்கூடிய கையுறைகள்
- கண்களை பாதுகாக்கும் மருத்துவ கொகள்ஸ்
- அவசர நிலைகளின் போது பயன்படுத்தக்கூடிய ஒட்சிசன் சிலின்டர்



## சாதாரண முதலுதவித் தொகுதி:

- வேறுபட்ட அளவுகள் மற்றும் வடிவங்களிலமைந்த பிளாஸ்டர்கள்
- காயங்களுக்கு கட்டுவதற்கான சிறிய, நடுத்தரளவு மற்றும் பெரிய நுண்ணுயிர் அகற்றப்பட்ட கட்டுத்துணி (sterile gauze)
- 2 நுண்ணுயிர் அகற்றப்பட்ட கண்களுக்கான கட்டுத்துணி (sterile eye dressings)
- முக்கோண கட்டுத்துணி (triangular bandage)
- முறுக்கு கட்டுத்துணி (crepe bandage)
- காப்பூசிகள் (safety pins)
- கத்தரிக்கோல்
- அற்ககோல் அற்ற துடைக்கும் சாடுகள் (wipes)
- சரும ஒவ்வாமைகளுக்கான கிறீம் வகைகள் - hydrocortisone கிறீம் போன்றவை
- மருத்துவ ஒட்டும் நாடா (medical adhesive tape)
- பூச்சி கடிகள் மற்றும் கொட்டுகைகளுக்கான கிறீம் அல்லது ஸ்பிரே
- சீழ்ப்புத்தடை (antiseptic) கிறீம்
- பரசிடமோல் போன்ற வலி நிவாரணிகள் (சிறுவர்களுக்கு குழந்தைகளுக்கான பரசிடமோல்), அஸ்பிரின் (16 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு வழங்கப்படக்கூடாது) மற்றும் ibuprofen
- Antihistamine கிறீம் அல்லது பிரிடன் அல்லது சிட்ரைசின் போன்ற வில்லைகள்
- காயங்களை துப்புரவாக்க வடிகட்டிய நீர்
- வயிற்றோட்ட தவிர்ப்பு மருந்துகள்
- சிறு எரிகாயங்களுக்கான சில்வர் sulfadiazine கிறீம்

**முக்கியம்: உங்கள் முதலுதவித் தொகுதியை பரிசோதித்து காலாவதியாகிய பொருட்களை மாற்றிக் கொள்ளவும்.**

---

மறுதலிப்பு: இந்த ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்கள் உங்களையும், உங்கள் அன்புக்குரியவர்களையும் COVID-19 தொற்றிலிருந்து பாதுகாக்கும் வகையில் அமைந்துள்ளன. இந்த ஆவணத்தில் காணப்படும் ஏதேனும் விடயம் தொடர்பில் உங்களுக்கு மேலதிக தெளிவுபடுத்தல் அவசியமாயின் அல்லது இந்த ஆவணத்தின் பிரகாரம் செயலாற்றுவதற்கு மேலதிக தகவல்கள் அவசியமாயின், நிபுணத்துவ ஆலோசனையை நாடுமாறு நாம் பரிந்துரைக்கின்றோம்.

**ஃபெயார்ஃபஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடெட்**

ஹொட்லைன்: 0112 428 428 | இணையத்தளம்: www.fairfirst.lk